# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 24.12.2012

காவேரி நீரில் தமிழகத்தின் உரிமை 120 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டு இருந்தாலும், அந்த ஒப்பந்தத்தையும், அதற்குப் பின் 1924 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளையும் பின்பற்றாமல், கர்நாடகா புதிய நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தியதன் காரணமாகவும், பாசனப் பரப்பினை அதிகப்படுத்தியதன் காரணமாகவும், கோடைப் பாசனத்திற்கு காவேரி நீரைப் பயன்படுத்துவதன் காரணமாகவும், பல ஆண்டுகளாகவே தமிழ்நாட்டிற்கு உரிமைப்படி கிடைக்க வேண்டிய காவேரி நீர் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, கோடைப் பாசனத்திற்காக தனது நீர்த்தேக்கங்களிலிருந்து, கர்நாடகா தண்ணீரை விடுவித்தவுடன், இது தமிழ்நாட்டில் குறுவை சாகுபடியை பாதிக்கும் என்பதால், இதனைத் தடுக்கக் கோரி 21.3.2012 அன்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. தமிழகத்திற்கு சட்டப்படி வந்து சேர வேண்டிய தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டதையடுத்து, காவேரி நதிநீர் ஆணையத்தை விரைந்துக் கூட்ட வேண்டும் என்று நான் பாரதப் பிரதமருக்கு 18.5.2012 அன்று கடிதம் ஒன்றினை எழுதினேன். எனது இந்தக் கடிதத்திற்கு உகந்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாத சூழ்நிலையில், காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினை கூட்ட உத்தரவிடக் கோரி 21.7.2012 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு இடைக்கால மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மேலும், நான் 23.8.2012 அன்று காவேரி நதிநீர் ஆணையத்தை கூட்ட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்து, அக்கூட்டத்தை கூட்டுமாறு பாரதப் பிரதமருக்கு மீண்டும் கடிதம் எழுதினேன். உச்ச நீதிமன்றத் தலையீட்டின் காரணமாக, 19.9.2012 அன்று காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தினை பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டினார்கள். இதில் இடர்பாடுக் கணக்கீட்டு முறைப்படி தமிழகத்திற்கு விடுவிக்கப்பட வேண்டிய நீரில் உள்ள குறைபாட்டு நீரளவான 48 டிஎம்சி அடி தண்ணீரை கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்றும்; அதன் பிறகு, காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி தொடர்ந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்றும்; நான் வலியுறுத்தியதற்கு மாறாக, 20.9.2012 முதல் 15.10.2012 வரை நாளொன்றுக்கு 9,000 கன அடி நீரை கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்றும்; அதன் பின்னர் நீர் விடுவிப்பது குறித்து காவேரி கண்காணிப்புக் குழு முடிவெடுக்கும் என்றும் பாரதப் பிரதமர் அறிவித்தார். அதன்பின்னர், தமிழகத்திற்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்றம், காவேரி நதிநீர் ஆணையம் மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு ஆகியவை, பல்வேறு ஆணைகளின்படி, 12.9.2012 முதல் 31.12.2012 வரை பில்லிகுண்டுலுவில் தமிழகத்திற்கு 56.816 டிஎம்சி அடி தண்ணீர் கிடைக்கப் பெற வேண்டும் என ஆணையிட்டுள்ளன. இன்று வரையில் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 47 டிஎம்சி அடி நீர் கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழகத்திற்கு குறைந்த பட்சம் 18 டிஎம்சி அடி தண்ணீர் கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மேலும் ஒரு மனு 20.12.2012 அன்று தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இடர்பாடு காலங்களில் நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரை கர்நாடகத்திலிருந்து பெற முடியும் என்ற அடிப்படையிலும், வடகிழக்குப் பருவ மழை இயல்பான அளவில் இருக்கும் என்ற அடிப்படையிலும், புதிய விவசாய உத்திகளை கையாள்வதன் மூலம் இயல்பான பரப்பில் சம்பா சாகுபடி மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக செப்டம்பர் 17 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டது. தண்ணீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, அரசு செலவில் நீர் வசதி உள்ள விவசாயிகளின் நிலங்களில் சமுதாய நாற்றாங்கால் அமைத்தல்; தேவையான நெல் நாற்றுகளை விலையில்லாமல் வழங்குதல்; சம்பா நடவுப்பணி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு அடியுரமாக இட இரசாயன உரங்கள் மற்றும் சிங்க் சல்பேட், ஜிப்சம், நுண்ணூட்டச் சத்து மற்றும் உயிர் உரங்கள் வழங்குதல்; சம்பா சாகுபடி பணிகளை குறுகிய காலத்தில் விரைந்து மேற்கொள்ள ஏதுவாக பண்ணை இயந்திரங்கள் வேளாண் பொறியியல் துறை மூலம் வாங்கி விவசாயிகள் பயன்பாட்டிற்கு வழங்குதல்; நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளுதல்; நேரடி நெல் விதைப்பு செய்யப்படும் வயல்களில் உழவுப் பணி மேற்கொள்ளுதல்; விதை மற்றும் களைக்கொல்லி போன்ற இடுபொருட்களை மானிய விலையில் வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கிய 68 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பில் சிறப்புத் தொகுப்புத் திட்டம் ஒன்றை ஆகஸ்ட் மாத இறுதியில் நான் அறிவித்தேன்.

பயிரிடப்பட்டுள்ள சம்பாப் பயிரைக் காப்பாற்றிட 69 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் கூடுதல் சிறப்புத் தொகுப்புத் திட்டம் ஒன்றினை நான் 5.12.2012 அன்று அறிவித்தேன். அதன்படி, காவேரி டெல்டா பகுதிகளில் உள்ள மின்சார பம்பு செட்டுகளை இயக்கி நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்காக 29.11.2012 முதல் பகலில் 6 மணி நேரம் இரவில் 6 மணி நேரம் என ஒரு நாளைக்கு 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது; டீசல் பம்பு செட்டுகளைப் பயன்படுத்தி மேற்பரப்பில் உள்ள நீரினை விவசாய நிலங்களுக்கு எடுத்துச் செல்லுவதை ஊக்குவிக்கும் வகையில், டீசல் மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு 600 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும் HDPE பைப்புகள் மற்றும் வளையக் கூடிய குழாய்கள் 100 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. உலர்ந்து போகும் நிலையிலுள்ள பயிர்களைக் காப்பாற்ற வறட்சியைத் தாங்கக் கூடிய வகையில் MOP உரம் மற்றும் Pink Pigmented Facultative Methylotroph ஆகியவற்றை தேவைக்கேற்ப பயிர்களின் மீது தெளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கென 300 பல்வகை நீர்த்தெளிப்பான்கள் மற்றும் 500 சிறிய நடமாடும் தெளிப்பான்கள் வாங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், முன் எப்போதும் இல்லாத வகையில் காவேரி டெல்டா விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர் காப்பீட்டுக் கட்டணத்தை முழுமையாக அரசே செலுத்தியுள்ளது. இதன்படி 5.51 லட்சம் விவசாயிகள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம், காவேரி டெல்டா விவசாயிகள் அனைவருக்கும் விவசாய காப்பீட்டு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இடர்பாடுக் காலங்களில், நீர் பங்கீட்டு விகிதாச்சாரத்தில், கர்நாடகம் 110 டிஎம்சி அடி தண்ணீரை தமிழகத்திற்கு வழங்கியிருக்க வேண்டும் என்றாலும், இதுவரை மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 63 டிஎம்சி அடி தண்ணீரே பெறப்பட்டுள்ளது. எனவே, மேட்டூர் அணையில் நீர் இருப்பு 8.582 டிஎம்சி அடி தண்ணீராக குறைந்ததையடுத்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட இயலாத சூழ்நிலையில், மேட்டூர் அணையிலிருந்து நீர்ப்பாசனத்திற்கு விடுவிக்கப்படும் நீர் 21.12.2012 மாலை முதல் நிறுத்தப்பட்டு, தற்போது குடிதண்ணீருக்கு மட்டுமே தண்ணீர் விடுவிக்கப்பட்டு வருகிறது. வட கிழக்குப் பருவமழை டிசம்பர் மாதத்தில் பொய்த்துவிட்டதன் காரணமாகவும், கர்நாடகம் தமிழகத்துக்குரிய தண்ணீரை விடுவிக்காததன் காரணமாகவும், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக நீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாலும், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் சம்பாப் பயிரை காப்பாற்ற

இயலுமா என்ற கவலையில் உள்ளனர் என்பதை நான் அறிவேன். கர்நாடகம் குறைந்த பட்சம் **18** டிஎம்சி அடி நீரை விடுவிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு **4.1.2013** அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது, உச்ச நீதிமன்றம் தமிழகத்திற்கு தண்ணீர் வழங்குவதற்கான ஆணையை வழங்கும் என நம்புகிறேன். தற்போது வழங்கப்பட்டு வரும் மும்முனை மின்சாரம் சம்பா சாகுபடி காலம் முடியும் வரை தொடர்ந்து கிடைத்திடும் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமும், ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி புதிய உத்திகளை கடைப்பிடிப்பதன் மூலமும், சம்பா சாகுபடி பெருமளவில் காப்பாற்றப்பட்டுவிடும் என நான் நம்புகிறேன். சம்பா பயிர் காப்பாற்ற இயலாத விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகை முழுவதையும் எனது அரசு வழங்கும் என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே அறிவித்துள்ளபடி, பயிர் இழப்பு ஏற்படும் விவசாயிகளுக்கு, வேளாண் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பேரிடர் நிவாரண நிதி ஆகியவற்றிலிருந்து ஏக்கர் ஒன்றுக்கு மொத்தம் 13,692 ரூபாய் வரை வழங்கப்படும். விவசாயிகளின் பாதுகாவலனாக திகழும் எனது அரசு, நெற்பயிரைக் காப்பாற்றவும், பயிர் இழப்பு ஏற்பட்டால் முழுமையான நிவாரணம் வழங்கவும், அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ள இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் எவரும், எந்தவித கவலையோ, அச்சமோ கொள்ள வேண்டியதில்லை என்றும்; அவர்கள் எந்த விபரீத முடிவையும் எடுக்க வேண்டாம் என்றும் விவசாயப் பெருமக்களை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இயற்கை பொய்த்துவிட்டாலும், கர்நாடகம் வஞ்சித்தாலும், மத்திய அரசு அலட்சியமாக இருந்தாலும், அவை காரணமாக தமிழக விவசாயிகள் எவ்வித துன்பம் அடைவதை நான் ஒரு போதும் சகித்துக் கொள்ள மாட்டேன். சம்பாப் பயிர் இழப்பு ஏற்பட்டால், உரிய நிவாரணம் வழங்கி விவசாயிகளுக்கு உறுதுணையாக அவர்களைப் பாதுகாக்கும் அரணாக எனது அரசு விளங்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**